**<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>**

**<u>சி.சி. எண்.44/2017</u>**

2023ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம் நாள் வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 1 வது நபரின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விக்ரம் | வயது | 23 |
| த.பெ.(அ)க.பெ. | வெஙகடேசன் | தொழில் | கூலி |
| ஊர்/பணிபுரியுமிடம் | பொம்மிகுப்பம் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u> எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை.

(1) நான் பொம்மிகுப்பம் கிராமத்தில் வசிக்கிறேன். நான் பெங்களூரில் மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். பெருமாபட்டில் எனது பாட்டி வீடு உள்ளது. வழக்கின் எதிரி எனது பாட்டி வீட்டிற்கு பக்கத்து வீட்டில் வசிக்கிறார். நான் இந்தியன் கேஸ் கம்பெனியில் அப்போது வேலை பார்த்து வந்த சமயம் 15.03.2017 அன்று காலை 10.00 மணியளவில் நான் சாப்பிடுவதற்கு பாட்டி வீட்டிற்கு வந்து சாப்பிட்டுவிட்டு மீண்டும் கம்பெனிக்கு என்னுடைய ஹிரோ ஹாண்டா ஸ்பெலன்டர் பதிவெண் டிஎன் 83 டபிள்யு 1390 இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். எனது பாட்டி வீட்டின் பக்கத்து தெருவில் குப்பன் மளிகை கடை உள்ளது. அந்த வழியாக நான் வந்த போது வழக்கின் எதிரி அந்த மளிகை கடை அருகே என்னை நிறுத்தி உனது வண்டியை கொடு நான் குரிசிலாப்பட்டு வரை சென்று வருகிறேன் என்று கேட்டார்.

(2) நான் வேலைக்கு செல்லவேண்டும் எனவே வண்டி தரமுடியாது என்று சொன்னேன். அதற்கு அவர் என்னை தேவிடியா பையா என்று அசிங்கமாக திட்டி உங்கொம்மாள கொடுக்கலான அவ்வுளதா என்று மிரட்டினார். மேலும் உன்னை அடித்து நாசம் செய்து விடுவேன் என்று சொன்னார். நான் வண்டியை எடுத்துக்கொண்டு கிளம்ப முயற்சி செய்தேன். நான் வேலைக்கு செல்ல வேண்டும் ஓனர் திட்டுவார் என்று கூறினேன். ஆனால் எதிரி என்னை மேலும் என்னை செல்லாவிடாமல் தடுத்து முள்வேலி மீது தள்ளி ஒரு கட்டையை எடுத்து என் தலை மீதும், கால் மீதும் அடித்தார். எனக்கு இரண்டு கால்

முட்டியிலும் காயம் ஏற்பட்டது. கலையரசன் மற்றும் சம்பத் அப்போது அங்கு வந்து என்னை காப்பாற்றினார்கள். எதிரி எனது வண்டியை எடுத்து வைத்துக்கொண்டார். நான் பயத்தில் அங்கிருந்து கம்பெனிக்கு நடந்து சென்றேன். அப்போது எனக்கு தலையில் பலத்த அடிப்பட்டதால் மயக்கமாகிவிட்டது. சிறிது நேரம் கழித்து நான் எனது சித்தப்பா சதிஷ்க்கு நான்தான் போன் செய்தேன்.

(3) என்னை உடனே மருத்துவமனைக்கு செல்லுமாறு கூறினார். எனது பாட்டிக்கு தகவல் தெரிவித்து அவர் நான் இருந்த இடத்திற்கு வந்துவிட்டார். அவர் என்னை திருப்பத்துார் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தார். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது போலீஸார் மருத்துவமனைக்கு வந்து என்னிடம் விசாரித்து எழுதிக்கொண்டார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி என்னை தாக்கபயன்படுத்திய கட்டையை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். என்னிடம் காட்டப்படும் கட்டையால் தான் எதிரி என்னை அடித்தார். மேற்படி கட்டை சா.பொ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீஸார் என்னை விசாரித்தனர்

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=

எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிாி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாமல் முடிக்கப்பட்டது.

**<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>**

**<u>சி.சி. எண்.44/2017</u>**

2023 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ம் நாள் வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 2 வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சதிஷ் | வயது | 32 |
| த . பெ . (அ)க . பெ . | சின்னமொன்னையன் | தொழில் | கூலி |
| ஊர்/பணிபுரியுமிடம் | பொம்மிகுப்பம் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u> எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை.

(1) நான் பொம்மிகுப்பம் கிராமத்தில் வசிக்கிறேன். நான் கிரானைட் வேலை செய்கிறேன். அ.சா.1 எனது அண்ணன் மகன். வழக்கின் எதிரியை தெரியும். கடந்த 15.03.2017 அன்று காலை சுமார் 10.30 மணியிருக்கும் நான் ஜோலார்பேட்டையில் வேலை செய்து கொண்டிருந்த சமயம் எனது அண்ணன் மகன் விக்ரம் அ.சா.1 எனக்கு போன் செய்து எதிரி மணிகண்டன் கட்டையால் தலைமீதும், கால் மீதும் அடித்துவிட்டதாக கூறினார். நான் உடனே சம்பவயிடமான குரும்பன் தெரு குப்பன் மளிகை கடை அருகில் சென்று பார்த்தேன். எனது அண்ணன் மகன் காயம் ஏற்பட்ட நிலையில் அங்கிருந்தார். எதிரி அ.சா.1 ஐ வழி மறித்து இருசக்கர வாகனத்தை கேட்டதாகவும், தர மறுத்ததால் கட்டையால் தாக்கி காயம் ஏற்படுத்தினார் என்றும், கூறினார். நான் விக்ரமை திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தேன். போலீஸார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=

எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாமல் முடிக்கப்பட்டது.